## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| M.C.O.P. No. 108/2012 C/W MCOP.114/2012 | Date : 30.06.2023 | PW1 |
|---|---|---|
| Name: ரேவதி | W/o. சின்னபையன் (எ) வேட்ராயன் | |
| Evidence Recorded Time: 12.05 P.M. to 12.20 P.M. | | |

**<u>4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

MCOP.114/2012 மனுவில் நான் மனுதாரர் என்றால் சரிதான். 14.09.2011 அன்று மாலை 4.30 மணிக்கு விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன நபர் என் கணவர் ஆவார். விபத்து சமயத்தில் TN 39 AH 6093 என்ற ஹிரோ ஹோண்டா வாகனத்தை எனது கணவர் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தில் சிவாஜி (எ) கணேசன் பயணம் செய்தார் என்றால் சரிதான். சிவாஜி (எ) கணேசன் என்பவர் விபத்தில் இறந்து போனதற்காக MCOP.108/2012 என்ற மனுவை சந்தரா வகையறாவினர் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். எதிர் திசையில் வந்த 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மகேந்திரா மினி ஆட்டோ நான்கு சக்கர வாகனம் TN 52 X 5897 வாகனம் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் ஆஜராக்கரதையும், கவனக்குறைவும் காரணம் என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு காரணமாக 1 எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீதுதான் மேச்சேரி காவல் துறையினர் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு குறித்து மேச்சேரி போலீசார் முறையான புலன் விசாரணை செய்து 1ம் எதிர்மனுதாரர் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். இந்த விபத்து சமயத்தில் என்னுடைய கணவர் சரியான பாதையில் கவனமாகவும், ஜாக்கரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார். விபத்திற்கு என்னுடைய கணவரின் கவனக்குறைவும், ஆஜாக்கரதையும் காரணம் இல்லை என்றால் சரிதான். என் கணவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதை பயன்படுத்திகொண்டு என் கணவர் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவும், ஆஜாக்கரதையும் தான் காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்கவேண்டும்என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து நான் எந்த

பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் சமயத்தில் என் கணவருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், விபத்து சமயத்தில் என் கணவரின் ஓட்டுநர் உரிமம் தொலைந்துவிட்டது. தொலைந்த ஓட்டுநர் உரிமத்திற்கு சான்றிட்ட நகலை பெற்ற தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் பாலிசி விதிமுறைகளை மீறி வாகனத்தை இயக்கியதால் 4ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என் கணவரின் வயது, தொழில், வருமானம் குறித்து எந்த விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது கணவரின் வயது குறித்து இறப்பு சான்று உள்ளது, ஆனால் தொழில், வருமானம் குறித்து தாக்கல் செய்யவில்லை. இழப்பீடு அதிகமாக பெறவேண்டும் என்ற எண்ணத்தில் எனது கணவர் கொத்தனார் மற்றும் விவசாயம் செய்து மாதம் ரூபாய் இருபதாயிரம் சம்பாதிப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி மனுவில் எனது கணவருக்கு கொத்தனார் வேலை என்றும், மேற்படி தொழில் மூலம் மாத வருமானம் வருகிறது என்றும் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். 2 முதல் 4 மனுதாரர்கள் தற்போது மேஜராகிவிட்டார்கள் என்றால் சரிதான். 2ம் மனுதாரர் பார்வதி என்பவருக்கு தற்போது திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். 2 முதல் 4 மனுதாரர்கள் எனது கணவரின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்பதால் 2 முதல் 4 மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது மேச்சேரி காவல் நிலையத்தார் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் கோரியுள்ள வட்டி விகிதம் 9 சதவீதம் என்பது அதிகம் என்றாலும், நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், அவ்வாறு இழப்பீடு பெறும் சமயத்தில் அதனை 2ம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றாலும் சரியல்ல. விபத்து சம்மந்தமாக எனது கணவர் பெயரில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

(2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை சிறிது

நேரத்திற்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

Evidence Recorded Time:01.31 P.M. to 1.40 P.M.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

TN 39 AH 6093 என்ற ஹிரோ ஹோண்டா இருசக்கர வாகனத்தை என் கணவர்தான் ஓட்டி சென்றார் என்றால் சரிதான். என் கணவர் ஓட்டி சென்ற TN 39 AH 6093 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை ம.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் படி வாகனத்தின் உரிமையாளர் சுப்ரியா டட்டா என்றும் வாகன காப்பீட்டாளர் ஓரியண்டல் இன்சூரன்ஸ் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவருக்கு தலையில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்தின்போது என் கணவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் என் கணவருக்கு சொந்தமானது இல்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் சுப்ரியா டட்டா என்பவரின் வாகனத்தை எடுத்துக்கொண்டு, தலைக்கவசம் அணியாமல், தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கி இந்த விபத்தினை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. என் கணவருக்கு பின்னால் அமரந்து சென்றவர் சிவாஜி (எ) கணேசனுக்கும் விபத்தில் அடிபட்டு இறந்துவிட்டார். விபத்து சம்மந்தமாக தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள விவரங்கள் அடிப்படையில்தான் இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் அதன் பிறகு திருத்தம் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையில் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசாருக்கு தகவல் கொடுத்த நபரை விசாரணை செய்தால்தான் இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று தெரியவரும் என்றால் சரிதான். என் கணவர் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி சென்று வந்து முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி நிலை தடுமாறி ராங்சைடில் வந்து எதிரே நிதானமாக வந்து கொண்டிருந்த டாட்டா ஏசி வண்டியின் மீது மோதி தானாக விபத்தினை ஏற்படுத்தியதாக சொன்னால் சரியல்ல, அது மகேந்திர கம்பெனியின் நான்கு சக்கர ஆட்டோ ஆகும். முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தில் மீது என் கணவர் சென்று மோதாமல் இருந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் குற்றவாளியாக

காண்பிக்கப்பட்டுள்ளதால் விபத்திற்கு நஷ்டஈடு கோரமுடியாது என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு கொடுப்பதாக இருந்தால் இரண்டு இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர்களும், காப்பீட்டாளர்களும் தான் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றாலும், நான்கு சக்கர வாகனத்தின் ஓட்டுநர் மீது தவறு இல்லாததால் இரண்டாம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. என் கணவரின் வயது, வருமானத்தை காண்பிக்க ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனுதள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.

## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| M.C.O.P. No. 108/2012 C/W MCOP.114/2012 | Date : 30.06.2023 | PW2 |
| Name: சந்தரா | W/o. சிவாஜி (எ) கணேசன் | |
| Evidence Recorded Time: 12.21 P.M. to 12.30 P.M. | | |

**4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

MCOP.108/2012 மனுவில் நான் மனுதாரர் என்றால் சரிதான். 14.09.2011 அன்று மாலை 4.30 மணிக்கு விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன நபர் என் கணவர் ஆவார். விபத்து சமயத்தில் TN 39 AH 6093 என்ற ஹிரோ ஹோண்டா வாகனத்தை சின்னப்பயைன் (எ) வேட்ராயன் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தில் எனது கணவர் சிவாஜி (எ) கணேசன் பயணம் செய்தார் என்றால் சரிதான். சின்னப்பயைன் (எ) வேட்ராயன் என்பவர் விபத்தில் இறந்து போனதற்காக MCOP.114/2012 என்ற மனுவை ரேவதி வகையறாவினர் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். எதிர் திசையில் வந்த 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மகேந்திரா மினி ஆட்டோ நான்கு சக்கர வாகனம் TN 52 X 5897 வாகனம் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் ஆஜராக்கரதையும், கவனக்குறைவும் காரணம் என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு காரணமாக 1 எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீதுதான் மேச்சேரி காவல் துறையினர் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு குறித்து மேச்சேரி போலீசார் முறையான புலன் விசாரணை செய்து 1ம் எதிர்மனுதாரர் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். இந்த விபத்து சமயத்தில் சின்னப்பயைன் (எ) வேட்ராயன் சரியான பாதையில் கவனமாகவும், ஜாக்கரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார். விபத்திற்கு சின்னப்பயைன் (எ) வேட்ராயனின் கவனக்குறைவும், ஆஜாக்கரதையும் காரணம் இல்லை என்றால் சரிதான். என் கணவர் விபத்திற்கு பின் கோமா நிலைக்கு சென்று பின்பு 14.12.2011ல் தர்மபுரி அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். விபத்தன் போது சம்பவ இடத்திலேயே சின்னப்பயைன் (எ) வேட்ராயன் இறந்துவிட்டதை

பயன்படுத்திகொண்டு மேற்படி சின்னப்பயைன் (எ) வேட்ராயன்மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டது, 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவும், ஆஜாக்கரதையும் தான் காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்கவேண்டும்என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் சமயத்தில் சின்னப்பயைன் (எ) வேட்ராயன் என்பவருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், விபத்து சமயத்தில் சின்னப்பயைன் (எ) வேட்ராயனின் ஓட்டுநர் உரிமம் தொலைந்துவிட்டது. தொலைந்த ஓட்டுநர் உரிமத்திற்கு சான்றிட்ட நகலை பெற்ற தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் சின்னப்பயைன் (எ) வேட்ராயன் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் பாலிசி விதிமுறைகளை மீறி வாகனத்தை இயக்கியதால் 4ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என் கணவரின் வயது, தொழில், வருமானம் குறித்து எந்த விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது கணவரின் வயது குறித்து இறப்பு சான்று உள்ளது, ஆனால் தொழில், வருமானம் குறித்து தாக்கல் செய்யவில்லை. இழப்பீடு அதிகமாக பெறவேண்டும் என்ற எண்ணத்தில் எனது கணவர் கொத்தனார் மற்றும் விவசாயம் செய்து மாதம் ரூபாய் இருபதாயிரம் சம்பாதிப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி மனுவில் எனது கணவருக்கு கொத்தனார் வேலை என்றும், மேற்படி தொழில் மூலம் மாத வருமானம் வருகிறது என்றும் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். 5, 6 மனுதாரர்கள் தற்போது மேஜராகிவிட்டார்கள் என்றால் சரிதான். 6ம் மனுதாரர் ராதிகாவிற்க திருமணமாகவில்லை. 5, 6 மனுதாரர்கள் எனது கணவரின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்பதால் 5, 6 மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 4ம் மனுதாரர் இந்திராணி என்பவர் என்னுடைய கணவரின் இரண்டாம் மனைவி என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வாரிசு சான்றிதழில் இந்தராணி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது மேச்சேரி காவல் நிலையத்தார் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால்

சரிதான். நான் கோரியுள்ள வட்டி விகிதம் 9 சதவீதம் என்பது அதிகம் என்றாலும், நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும், அவ்வாறு இழப்பீடு பெறும் சமயத்தில் அதனை 2ம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றாலும் சரியல்ல. விபத்து சம்மந்தமாக சின்னப்பயைன் (எ) வேட்ராயன் பெயரில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

(2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை சிறிது நேரத்திற்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

Evidence Recorded Time:01.41 P.M. to 1.50 P.M.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

TN 39 AH 6093 என்ற ஹிரோ ஹோண்டா இருசக்கர வாகனத்தில் என் கணவர் பின்னால் அமர்ந்துசென்றார் என்றால் சரிதான். சின்னபையன் (எ) வேட்ராயன் ஓட்டி சென்ற TN 39 AH 6093 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை ம.சா.ஆ.16 ஆக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் படி வாகனத்தின் உரிமையாளர் சுப்ரியா டட்டா என்றும் வாகன காப்பீட்டாளர் ஓரியண்டல் இன்சூரன்ஸ் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சின்னபையன் (எ) வேட்ராயனுக்கு தலையில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்தின்போது சின்னபையன் (எ) வேட்ராயன் தலைக்கவசம் அணியவில்லை என்றால் எனக்கு தெரியாது. இருசக்கர வாகனம் சின்னபையன் (எ) வேட்ராயனனுக்கு சொந்தமானது இல்லை என்றால் சரியல்ல. சின்னபையன் (எ) வேட்ராயன் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் சுப்ரியா டட்டா என்பவரின் வாகனத்தை எடுத்துக்கொண்டு, தலைக்கவசம் அணியாமல், தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கி இந்த விபத்தினை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. சின்னபையன் (எ) வேட்ராயனுக்கு பின்னால் என் கணவர் அமரந்து சென்றார் அவர் விபத்தில் அடிபட்டு தர்மபுரி அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். விபத்து சம்மந்தமாக தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ள விவரங்கள் அடிப்படையில்தான் இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் அதன் பிறகு திருத்தம்

செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையில் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசாருக்கு தகவல் கொடுத்த நபரை விசாரணை செய்தால்தான் இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று தெரியவரும் என்றால் சரிதான். சின்னபையன் (எ) வேட்ராயன் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி சென்று வந்து முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி நிலை தடுமாறி ராங்சைடில் வந்து, எதிரே நிதானமாக வந்து கொண்டிருந்த டாட்டா ஏசி வண்டியின் மீது மோதி தானாக விபத்தினை ஏற்படுத்தியதாக சொன்னால் சரியல்ல, அது மகேந்திர கம்பெனியின் நான்கு சக்கர ஆட்டோ ஆகும். முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தில் மீது சின்னபையன் (எ) வேட்ராயன் சென்று மோதாமல் இருந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. சின்னபையன் (எ) வேட்ராயன் குற்றவாளியாக காண்பிக்கப்பட்டுள்ளதால் விபத்திற்கு நஷ்டஈடு கோரமுடியாது என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு கொடுப்பதாக இருந்தால் இரண்டு இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர்களும், காப்பீட்டாளர்களும் தான் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றாலும், நான்கு சக்கர வாகனத்தின் ஓட்டுநர் மீது தவறு இல்லாததால் இரண்டாம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. என் கணவரின் வயது, வருமானத்தை காண்பிக்க ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனுதள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.